# இல்லம்

செய்திமடல்

NEHRP

VOLUME ISSUE 2008/3 JULY - SEPTEMBER 2008


## திட்டத்தின் பணிமுன்னேற்றம் குறித்து உலகவங்கியின் மீளாய்வுக் குழு பாராட்டு



வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம், 2004 ஆம் ஆண்டிலிருந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேற் கொண்டுவரும் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வீட்மைப்பு மீள்நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் குறித்து உலக வங்கியின் திட்டமீளாய்வுக்குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளது. 2008 ஜுன் மாதம் 10ஆம் திகதியிலிருந்து 20 ஆம் திகதி வரை உலக வங்கியின் திட்ட மீளாய்வுக்குழு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்நடவடிக்கைகளின் இறுதியில் குழு வெளியிட்டுள்ள அறிக்கையி லேயே திட்டத்தின் முன்னேற்றம் குறித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும் சவால்கள் நிறைந்துள்ள இக் காலப்பகுதியில் திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுத்துவருவதற்கு ஆதரவாகச் செயற்படும் இலங்கை அரசாங்கம், திட்டப்பணிப்பாளர், மாவட்ட பிரதிதிட்டப் பணிப்பாளர்கள், மாவட்ட பொறியலாளர்கள் மற்றும் திட்டத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் இவ்வறிக்கையின் மூலம் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மீளாய்வுக் குழு தனது விஜயத்தின்போது தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு, மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு அதிகாரிகள், வடக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளர், கிழக்கு மாகாண வீதிகள் மற்றும் மீள்குடியேற்ற உள்ளூராட்சி அமைச்சு அதிகாரிகள், மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஆணைக்குழுவின் பிரதிநிதி ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடியது.

அதேவேளை இக் குழு மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப்பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திட்ட நடவடிக்கைகள் இடம்பெறும் நான்கு கிராமங்களுக்கும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமம், மொறவேவ, கோமறங்கடவெல பிரதேசசெயலாளர் பிரிவுகளிலுள்ள ஆறு கிராமங்களுக்கும் விஜயம் செய்திருந்தது.

கிராமங்களுக்கான இவர்களின் விஜயத்தின்போது கிராம மக்கள் இவர்களுக்கு தமது பாரம்பரியங்களுக்கு அமைவாக அமோக வரவேற்பளித்தனர். பயனாளிகளினால் கட்டி முடிக்கப்பட்ட பல வீடுகளை குழு உறுப்பினர்கள் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தனர்.

மோதல்களின் போது தமது வீடுகளை இழந்து இடம்பெயர்ந்து சென்று பின் மீளக்குடியமர்ந்த நலிவுற்ற மக்களுக்கான இவ்வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம், நான்காண்டு காலப்பகுதியில் 31,270 வீடுகள் மீள்நிர்மாணம் செய்யப்படுவதனை இலக்காகக் கொண்டு செயற்படுகிறது. இப்பணிக்காக உலகவங்கி 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை அரசாங்கத்திற்கு நீண்டகால கடன் அடிப்படையில் வழங்கியிருந்தது.

இக் குழு விஜயம் செய்த காலப்பகுதியில் (2008 ஜுன் மாதத்தில்) 22,444 வீடுகள் பயனாளிகளினால் மீள்நிர்மாணம் செய்யப்பட்டிருந்தன. இது மொத்த இலக்குத் தொகையின் 65% என்பது குறிப்பிடத்தக்கது. 7,037 வீடுகளில் மலசலகூடம் மற்றும் வீட்டின் வெளிப்புற சுவர் பூச்சுவேலைகள் இடம்பெற்றுவருவதாகவும் 6730 வீடுகள் பூரணப்படுத்தப்படுவதற்கான பல்வேறு நிலைகளில் கட்டுமானப்பணிகள் இடம்பெற்று வருவதாகவும் இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப்பணிகள் பற்றிய நிலை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 2ம் பக்கம்......

## அமைச்சர் கௌரவ சுசந்த புஞ்சிநிலமே திட்ட தலைமைப் பணிமனைக்கு விஜயம்

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர் மாணத்திட்டத்தின் பணிமுன்னேற்றம் பற்றியும் எதிர்கால செயற்பாடுகள் பற்றியும் கலந்து ரையாடுவதன் பொருட்டு தேசத்தை கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சுசந்த புஞ்சிநிலமே அவர்கள் அண்மையில் திட்ட தலைமைப் பணிமனைக்கு விஜயம் செய்தார்.



அமைச்சர் கௌரவ சுசந்த புஞ்சிநிலமே அவர்கள் திட்டப்பணிப்பாளர் மற்றும் திட்ட செயலணிக் குழுவினருடன் கலந்துரையாடு வதனை படத்தில் காணலாம்.

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு திட்டம் பற்றிய செயலமர்வு

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பாக கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு ஒன்று 24.07.2008 ம் திகதியன்று திருகோணமலை அலஸ்தோட்டத்தில் அமைந்துள்ள "கிளப் ஓஷானிக்" இல் இடம் பெற்றது. இச் செயலமர்வில் கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் கௌரவ சிவனேசதுரை சந்திரகாந்தன், அமைச்சர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்ட பணிப்பாளர், திட்டம் பற்றி விளக்கமளிப்பதையும் முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் அவதானித் துக்கொண்டிருப்பதையும் படத்தில் காணலாம்.

1ம் பக்க தொடர்ச்சி..........

### NEHRP பௌதீக முன்னேற்றம் - 2008/06/20ல் உள்ளபடி

| மாவட்டம் | ஒதுக்கப்பட்ட வீடுகள் | ஆரம்பிக்கப் பட்டவை | நிர்மாணிக்கப் பட்டவை | நிர்மாணிக்கப் பட்டுக் கொணடிருப்பவை | நிர்மாணிக்கப் படவுள்ளவை | ஒதுக்கீட்டைவிட மேலதிகமானவை |
|---|---|---|---|---|---|---|
| ாழ்ப்பாணம் | **11,258** | **8,064** | **3,986** | **4,078** | **3,194** | **-** |
| ிளிநொச்சி | **3,031** | **611** | **611** | **-** | **2,420** | **-** |
| ுல்லைத்தீவு | **2,313** | **613** | **613** | **-** | **1,700** | **-** |
| வுனியா | **1,495** | **1,648** | **1,645** | **3** | **-** | **153** |
| ன்னார் | **2,254** | **1,769** | **1,574** | **195** | **485** | **-** |
| ிருகோணமலை | **3,973** | **4,873** | **4,543** | **330** | **-** | **900** |
| ட்டக்களப்பு | **7,651** | **7,799** | **6,573** | **1,226** | **-** | **148** |
| ம்பாறை | **2,809** | **3,798** | **3,401** | **397** | **-** | **989** |
| மொத்தம் | **34,784** | **29,175** | **22,946** | **6,229** | **7,799** | **2,190** |

திட்டத்தின் வெற்றிகரமான நடவடிக்கைகள் காரணமாக ஐரோப்பிய ஆணைக்குழுவும் இத்திட்ட நடவடிக்கைகளுக்கு தனது பங்களிப்பினை வழங்க முன்வந்தது. 3,514 வீடுகளை மீள்நிர்மாணிப்பதற்காக அது 2006 ஜுன் மாதத்தில் 7.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கியது.

இந் நிதியினைக்கொண்டு 3232 வீடுகளின் மீள்நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் 2,735 வீடுகளின் கட்டுமானப்பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுவிட்டன. இது மொத்தத் தொகையின் 78%மாகும். 1908 வீடுகளுக்கு வெளிப்பூச்சு மற்றும் மலசலகூடம் அமைக்கும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. ஐரோப்பிய ஆணைக்குழு வழங்கிய நன்கொடையின் 86% செலவு செய்யப்பட்டுள்ளது என இவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**மேலதிக நிதி உதவிகள்.**

இதேவேளை 2007 டிசம்பர் மாதத்தில் ஐரோப்பிய ஆணைக்குழு மேலும் 5000 வீடுகளை மீள்நிர்மாணம் செய்வதற்காக 14.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை மேலதிக நிதியாக வழங்கியது. சர்வதேச அபிருத்தி நிறுவனம் (உலக வங்கி) மேலும் 13615 வீடுகளை மீள்நிர்மாணம் செய்வதற்காக 43 மில்லியன் அமெரிக்க டொலர்களை மேலதிக நிதியாக வழங்கியது. இவ்வாறு

## பயனாளிகளின் தவணைக்கொடுப்பனவு நடைமுறைகளில் வெளிப்படைத் தன்மை

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் முக்கியமான அம்சங்களில் குறிப்பிடத்தக்கது அதன் வெளிப்படைத் தன்மையாகும். (Transparency)

கிராமத் தெரிவு மற்றும் பயனாளிகள் தெரிவு ஆகியவற்றின் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்காக அந்த நடவடிக்கைகளின் போது தெரிவு செய்யப்பட்ட கிராமம் மற்றும் பயனாளிகளின் பெயர் பட்டியல், பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்றன. ஆவற்றின் பிரதிகள் பிரதேச செயலாளர் அலுவலகங்கள், கிராமசேவை உத்தியோகத்தரின் அலுவலகம், மற்றும் மாவட்ட திட்ட அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படுகின்றன. பொதுமக்களும் மற்றும் நிறுவனங்களும் தமது ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்கு கால அவகாசம் வழங்கப்படுகின்றது. கிராம மற்றும் பயனாளிகள் தெரிவு பற்றி எந்த ஒரு நபரோ நிறுவனமோ முறையீடு செய்வதற்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது. கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் பிரதேச செயலாளர், மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) மற்றும் திட்டப் பணிப்பாளர் ஆகியோரினால் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் முறையீட்டாளருக்கு அதுபற்றி அறிவிக்கப்படுகின்றது.

இத்தகைய வெளிப்படைத் தன்மையானது, பயனாளிகளுக்கான தவணைக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவது தொடர்பாகவும் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென மாவட்ட பிரதி திட்டப்பணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பயனாளிக்கும் ஒவ்வொரு கட்டத்தின்போதும் வழங்கப்பட்ட தவணைக் கொடுப்பனவு பற்றிய விபரங்கள் மாவட்ட திட்டக் கணக்காளரின் ஒப்பத்துடன் பிரதேச செயலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படவேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. திட்டத்தின் கட்டம் IV இலிருந்து (2008/2009) இந்த நடைமுறை கட்டாயமாகப் பின்பற்றப்படவேண்டுமென திட்டப் பணிப்பாளர் மாவட்ட திட்ட அலுவலகங்களுக்கு எழுத்துமூலம் அறிவித்திருக்கின்றார்.

இந்த நடைமுறையைப் பின்பற்றுவதன்மூலம் பயனாளிகளுக்கு வழங்கப்படும் தவணைக் கொடுப்பனவுகள் அவர்களைச் சரியான வகையிலே சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் சேதமுற்ற NEHRP வீடுகளை மீள்நிர்மாணம் செய்ய மேலதிக நிதிஉதவி

மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்டம் I (2005/2006) மற்றும் கட்டம் II (2006/2007)ன் கீழ் மீள்நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருந்த வீடுகளில் சில, கடந்தவருடம் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக சேதமடைந்துள்ளன. வீடுகளிலிருந்த கட்டிடப்பொருட்கள் களவாடப்பட்டிருந்தன. இதனால் மேற்கொண்டு மீள்நிர்மாண வேலைகளை பயனாளிகள் செய்ய முடியாது இருக்கின்றனர். இதனால் அவர்கள் சிறு குடில்கள் அமைத்தும் உறவினர்கள் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியிருக்கின்றனர்.



இவ்வாறு பாதிக்கப்பட்ட பயனாளிகள் தங்கள் வீடுகளைத் திருத்தி அமைப்பதற்காக திட்டம் மேலதிகமாக 75,000 ரூபாவை உதவியாக வழங்க முன்வந்துள்ளது. வீட்டின் சேதத்திற்கு அமைவாக இந்த உதவித்தொகை தீர்மானிக்கப்படும். எவ்வாறாயினும் உதவியின் ஆகக்கூடிய தொகை ரூபா 75,000/= மாக இருக்கும்.

இவ்வாறு கட்டம் I ன் கீழ் கிரிமிச்சையில் கட்டப்பட்டு சேதமடைந்த 52 வீடுகளையும், கட்டம் IIன் கீழ் கட்டப்பட்டு கடந்தவருடம் சேதமடைந்த வீடுகளையும் திருத்துவதற்கு இந்த மேலதிக நிதியுதவியை வழங்க திட்டம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதே வேளை கிரிமிச்சையில் தற்போது இடம்பெற்று வரும் திறன்பயிற்சி நெறியைப் பயன்படுத்தி அங்கு சேதமுற்ற வீடுகளை திருத்தி அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மாவட்ட பிரதி திட்டப் பணிப்பாளர்களின் கடமைகளில் மாற்றம்

திட்டத்தின் உள்ளக கட்டுப்பாடுகளை பலப்படுத்துவதற்காகவும் செயற்படுதிறனை மேலும் அதிகரிப்பதற்காகவும் 2008 ஜுலை 10 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்படுவதாக திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

1. **திரு. V.சாம்பசிவம்** - பிரதி திட்டப் பணிப்பாளர், யாழ்மாவட்டத்தின் வலயம் I ன் பொது நிருவாகத்திற்கும் கட்டம் I மற்றும் III ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக கடமையாற்றுவார்.
2. **திரு.J.X.செல்வநாயகம்** - பிரதி திட்டப் பணிப்பாளர், யாழ்ப்பாண மாவட்டத்தின் மேலதிக பிரதி திட்டப் பணிப்பாளராக செயற்படுவதுடன் கட்டம் IV இன் கீழ் கிராமத் தெரிவு மற்றும் பயனாளிகள் தெரிவு போன்றவற்றிற்கும் பொறுப்பாக இருப்பார்.
3. **திரு.K.சுந்தரேசன்** - பிரதி திட்டப் பணிப்பாளர், திருகோணமலை மாவட்ட பிரதி திட்டப் பணிப்பாளராக கடமையாற்றுவார்.
4. **திரு.ஏ.சத்தியசீலன்** - பிரதி திட்டப் பணிப்பாளர், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களின் பிரதி திட்டப் பணிப்பாளராக விளங்குவார். இவர் வவுனியா மாவட்ட திட்ட அலுவலகத்திலிருந்து செயற்படுவார்.

# வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாண திட்டத்தின் கீழ் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள்



இலங்கையில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுற்றாடலானது யுத்தம் காரணமாக பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளது. அதே வேளை இப் பிரதேசங்களில் குறுகிய காலத்தில் அதிவிரைவாக அபிவிருத்தி மற்றும் மீள்நிர்மாணத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது காரணமாக பல்வேறு சுற்றாடல் தாங்கங்கள் ஏற்பட்டுவருகின்றன.

யுத்த அழிவுகளிலிருந்து மீண்டு புது வாழ்வு தேடும் சமூகத்திற்கு புதிய தேவைகளுக்கமைய திட்டமிடப்பட்ட வகையில் உட்கட்டமைப்பு நிர்மாணப் பணிகளைச் செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும். அவ்வாறு குறுகிய காலத்தில் பெரிய திட்டங்களை முன்னெடுக்கும் போது ஏற்படக்கூடிய சுற்றாடல் தாக்கங்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் மாற்றுச் சுற்றாடல் பாதுகாப்புத் திட்டங்களையும் முன்வைக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாண திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் மீள்நிர்மாண நடவடிக்கைகளினால் ஏற்படும் சுற்றாடல் தாக்கங்களை முன்கூட்டியே இனங்கண்டு, தேவையான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவென சுற்றுச் சூழல் பாதுகாப்பு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. அதன் செயற்பாடுகள் பின்வருமாறு.

1. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்துதல்
   - பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில்
   - கிராமிய மட்டத்தில்
   - கட்டிடப் பொருட்கள் உற்பத்தியாளர் மட்டத்தில்
2. மாற்று கட்டிடப் பொருட்களை அறிமுகப்படுத்துதல்
3. பயனாளிகள் மட்டத்திலான மரநடுகைத்திட்டம்
4. பயனாளிகள் மூலமாக கழிவு முகாமைத்துவ உபாயங்களை நடைமுறைப்படுத்துதல்.

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாண திட்ட மரநடுகைச் செயற்திட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மொத்தமாக 40,000 பயன்தரும் மரக்கன்றுகள், உரிய பாராமரிப்பு மற்றும் கண்காணிப்பு ஏற்பாடுகளின் கீழ் நடுகை செய்யப்பட்டுள்ளன. இந்த செயற்பாடானது, பிரதேசங்களின் சுற்றுச்சூழலை மட்டும் மேம்படுத்தாது பயனாளிகளின் வாழ்கை மட்டத்தையும் உயர்வடைய வைக்கின்றது.

மேலும், மேற்குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்தினை யாழ்ப்பாண மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அங்கு போதுமான அளவு நாற்றுக்கள் இல்லாத காரணத்தினாலும், தேங்காய் மற்றும் தென்னை நாற்றுக்களின் விலைகள் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் பலமடங்கு அதிகரித்து காணப்பட்டதாலும். எமது திட்டமானது 10,000 உயரின தென்னை விதைகளை கப்பல் மூலமாக யாழ்ப்பாணம் கொண்டு சென்றது. அங்கு கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவியுடன் நாற்று மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 2000 நாற்றுக்கள் மூன்று வருட காலத்திலேயே காய்ப்பதுடன் கூடிய அளவு பயனையும் தரக்கூடியவை. இத்தகைய தென்னை நாற்றுகள் 2008 செப்டெம்பர்- ஒக்டோபர் மாதப்பகுதியில் பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளன. இதன் மூலம் பயனாளிகளின் வாழ்கைச் சுமை குறைவடைவதோடு மட்டுமல்லாது அம்மாவட்டத்தின் தேங்காய் உற்பத்தி அளவும் கூடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும், வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாண திட்டமானது பாடசாலை மற்றும் பொது இடங்களின் வளாகங்களிலும் மரநடுகை திட்டத்தை முன்னெடுத்து வருகின்றுது.
எனவே நேர்ப் திட்டத்தின் மரநடுகை செயற்பாடானது அந்தந்த மாவட்டங்களின் சுற்றுச்சூழலை மட்டும் மேம்படுத்தாது பயனாளிகளின் வாழ்கைத்தரமும் உயர்வடைய வழி சமைத்துள்ளது எனலாம்.

## தொழில் திறன் பயிற்சிநெறி

வடக்கு கிழக்கு மாகாணங்களில் முரண்பாடுகளால் அழிவுற்ற வீடுகளை மீள்நிர்மாணம் செய்தல் மற்றும் தங்கி வாழ்வோருக்கு ஜீவனாதார உதவிகளை வழங்குதல் போன்ற காரணங்களுக்காக வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின்கீழ் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதற்கு இன்னொரு காரணம் இப்பிரதேசங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக பெருமளவிலான திறன்வாய்ந்த தொழிலாளர்கள் இவ்விடங்களிலிருந்து இடம்பெயர்ந்து சென்றமையாகும். இதனால் இப்பிரதேசங்களில் தொழிலாளர்களுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவியது. தொழில்திறன் பயிற்சியானது, ‘‘பயனாளி தானே தனது வீட்டைநிர்மாணித்தல்’’ என்ற எண்ணக்கருவின் செயலாக்கத்திற்கு உறுதுணையான தாக்கத்தினை ஏற்படுத்தும் ஒன்றாகும்.



திட்ட அமுலாக்கத்தில் இதுகாலவரை 750 மேசன் தொழிலாளர்களும் 475 தச்சுத் தொழிலாளர்களும் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக எதிர்வரும் காலங்களில் மேலும் 900 இளைஞர்களுக்கு தொழில்திறன் பயிற்சி வழங்கவிருக்கிறோம். பின்வரும் இரண்டுவகையான பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

- பயிற்சி பெற்று வெளியேறிய தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்பு பயிற்சி
- மரபு வழிவந்த தொழில்திறன் உழைப்பாளர்களுக்கு செயலமர்வு.

முதலாவது பயிற்சியானது முன்னர் பயிற்சி பெற்று வெளியேறியோருக்கான மேலதிக பயிற்சி வழங்குவதாகும். இது பயிற்சிபெற்று வெளியேறிய தொழிலாளர்கள் வேலைத்தலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கான ஒரு தொடரும் பயிற்சியாகும். களத்திலே இவர்கள் பல நடைமுறைப் பிரச்சினைகளை சந்தித்திருக்கின்றனர். இரண்டுமாடிக் கட்டடங்களை நிர்மாணிக்கும்போது அதற்கான தொழில்நுட்பத்தை இவர்கள் அறிந்திருக்காதவிடத்தும் அதில் அவர்கள் ஆர்வம் கொண்டிருக்குமிடத்து இத்தகைய பயிற்சி பயனுடையதாகும்.

இரண்டாவது பயிற்சியானது மரபுவழியாகவும் அனுபவரீதியாகவும் தமது தொழிலை மேற்கொண்டு வருபவர்களுக்கான ஒரு செயலமர்வாகும். இந்த செயற்திட்டத்தின் போது இவர்களுக்கு ‘நேர்ப’ பின் திட்ட எண்ணக்கரு பற்றி அறிமுகப்படுத்தப்படும். அத்துடன் இவர்களுக்கு கட்டிட நிர்மாணம் தொடர்பான தொழில்நுட்ப அறிமுகம் செய்துவைக்கப்படும்.

இந்த பயிற்சித் திட்டத்தின் பிரதான அம்சம், பயிற்சியைத் தொடர்ந்து இவர்களுக்கு நேர்ப் திட்டத்தின் கீழ் கட்டுமானத் தொழில் வாய்ப்புகள் வழங்கப்படுவதாகும். இது இவர்களுக்கு இத்துறையிலே அனுபவம் மற்றும் மனஉறுதி ஆகியவற்றையும் பெற்றுத் தரும். வேறு இடங்களில் தொழில் திறன் பயிற்சி பெறுபவர்களுக்கு இச் சந்தர்ப்பம் கிட்டுவதில்லை. இச்செயற்திட்டத்தின் இன்னொரு முக்கிய அம்சம் இப்பயிற்சியினை நிர்மாணத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் கண்காணிப்பதாகும். இதன்மூலம் இந்த வீடு மீள்நிர்மாண செயற்திட்டத்திலே தொடர்ந்து ஈடுபடுவதற்கான முறையான பயிற்சியைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதனை உறுதிப்படுத்த முடியும். இத்திட்டத்தின் கீழ் வேலைசெய்யும் போதே பயிற்சி பெறுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவது இன்னொரு முன்னேற்றகரமான அம்சமாகும். திட்ட நடைமுறைப்படுத்துகைக்காக பயனாளிகள் தெரிவுசெய்யப்படும் அதே பிரதேசங்களிலேயே பயிற்சிகளும் வழங்கப்படும்.

# உலகவங்கி கண்காணிப்புக் குழுவின் கிழக்கு மாகாணத்திற்கான விஜயம்



திருகோணமலை மாவட்டத்துக்கான
விஜயத்தின் போது பயனாளிகள், கண்காணிப்புக்
குழுவினருக்கு அமோக வரவேற்பளித்தனர்



திருகோணமலை, தெலுங்கு நகரில் சம்பிரதாய
பூர்வமாக வீடு திறந்துவைக்கப்படுகின்றது



திருகோணமலை, பத்தினிபுரம் கிராமத்தில்
சம்பிரதாய பூர்வமாக வீடு
திறந்துவைக்கப்படுகின்றது



திருகோணமலை, மொறவெவவில்
பயனாளிகளுடனான சந்திப்பு



திருகோணமலை, கோமரங்கடவெலவில்
பயனாளிகள் குடும்பத்துடன் கலந்துரையாடல்.



மட்டக்களப்பு, வாகரையில் சம்பிரதாய பூர்வமாக
வீடு திறந்துவைக்கப்படுகின்றது

# கிழக்கில் மீளெழுச்சிபெறும் கட்டுமுறிவுக் கிராமம்

**மட்டக்களப்பு மாவட்டத்தில், கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மிகப் பின்தங்கிய ஒரு கிராமமே கட்டுமுறிவுக் கிராமம். மட்டக்களப்பு – திருகோணமலை பிரதான வீதியில் (A 15) அமைந்துள்ள கதிரவெளியிலிருந்து மேற்குப்புறமாக 19 கி.மீற்றர் தூரத்திலும் வாகரையிலிருந்து 32 கி.மீற்றர் தூரத்திலும் இக் கிராமம் அமைந்துள்ளது.**

இந்தக் கிராமத்தில் கட்டுமுறிவு குளம் அமைந்துள்ளது. இதன் காரணமாக அக் குளத்தின் பெயரே கிராமத்தின் பெயராகவும் அமைந்துவிட்டது. இக் குளம் அடிக்கடி தனது அணைக்கட்டினை உடைப்பதனால் கட்டுமுறிவுக்குளம் என அழைக்கப்படுகின்றது. இக் குளம் 25.5 சதுர மைல் பரப்பளவு கொண்டதாகும். குளத்தின் நீர் பிடிப்பு அளவு 16 அடிகளாகும்.

இக்குளப்பிரதேசத்தினை அண்டி தோணிதாட்டமடு, ஆண்டான்குளம், கின்னேரியன் குளம், சோளன் கட்டுக்குளம், மானாக்குளம் ஆகிய குளங்களும் அணிசெய்கின்றன.

இந்தக் கிராமம் எதிநோக்கும் மிகப்பெரும் பிரச்சினை பொதுப் போக்குவரத்து வசதி எதுவும் இல்லாமையாகும். கிராமம் ஒன்றிற்கு இருக்கவேண்டிய அடிக்கட்டுமான வசதிகள் எதுவும் இக்கிராமத்தில் இல்லையெனலாம். இந்தப் பிரதேசம் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலிருந்து துண்டிக்கப்பட்டிருப்பதுடன் மிகத் தொலைதூரத்திலும் உள்ளது. மிக ஒடுங்கிய மண்வீதிகளே கிராமங்களை இணைக்கின்றன. மழைகாலங்களில் போக்குவரத்து செய்ய முடியாதளவுக்கு வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. வெள்ளம் வடிவதற்கு பலநாட்கள் எடுப்பதன் காரணமாக அத்தியாவசிய தேவைகளுக்காக மக்கள் சிறு கட்டுமரங்களைப் பயன்படுத்துகின்றனர்.

பொதுப் போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் மக்கள் கால்நடையாகவோ அல்லது துவிச்சக்கர வண்டி மூலமாகவோ தான் பயணிக்கின்றனர். நோயாளர்களை தொலைதூரத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதில் இக் கிராம மக்கள் பெரும் இன்னல்களை அனுபவிக்கின்றனர். இரவு நேரங்களில் பாம்பு தீண்டிய பலர் வைத்தியசாலைக்குக் கொண்டுசென்று சேர்ப்பதன் முன்னதாகவே உயிரிழந்த சம்பவங்கள் பல உண்டு.



*உலக வங்கியின் திட்ட மீளாய்வுக் குழு 2008 ஜுன் 13ம் திகதியன்று கட்டுமுறிவு கிராமத்திற்கு விஜயம் மேற்கொண்டது*

கட்டுமுறிவுக் குளமே இப்பிரதேச மக்கள் வாழ்க்கையின் உயிர்நாடியாக விளங்குகின்றது. 500 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளில் நெற்பயிர்செய்வதற்கு இந்தக் குளம் உதவுகின்றது. காலபோகம், மகாபோகம் ஆகிய இரண்டு போகங்களிலும் நெல் பயிரிடப்படுகின்றது. குளத்தில் மீன்பிடிப்பதும் குளத்தை அண்டிய காடுகளில் தேனெடுத்தலும் இக் கிராம மக்களின் ஜீவனோபாயமாகும். துரதிட்டவசமாக இங்குள்ள நெல்வயல்கள் இந்தக் கிராமத்தின் மக்களுக்கு உரித்துடையவையன்று. இங்குள்ள வயல்களில் இவர்கள் கூலித்தொழிலாளர்களாகவே வேலை செய்கின்றனர். மக்கள் அனைவருமே வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் நலிவுற்றவர்களாவர். பெரும்பாலும் கதிரவெளி, பால்சேனை, வாகரை கிராமங்களைச் சேர்ந்த மக்களே நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர்

இந்தக் கிராமத்தில் வாழும் மக்கள் அனைவரும் 1950 ஆம் ஆண்டின் பின்னர் வாகரைப் பிரதேசத்திலிருந்து கொண்டுவந்து குடியேற்றப்பட்டவர்களாவர். இப் பிரதேசத்தில் அடிக்கடி ஏற்படும் அமைதியற்ற சூழல் காரணமாக இடப்பெயர்வுகள் ஏற்படுகின்றன. இவ்வாறு 1990 களில் வன்செயல்கள் காரணமாக இக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்கள் தீவுச்சேனைப் பிரதேசத்தில் அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டனர்.2002 ஆம் ஆண்டிலே அமைதிச் சூழல் திரும்பியதும் இடம்பெயர்ந்து சென்ற மக்கள் அனைவரும் கட்டுமுறிவுக்குத் திரும்பி மீளக்குடியமர்ந்தனர். தற்போது இக் கிராமத்தில் 156 குடும்பங்கள் உள்ளன.

இந்தக் கிராமத்தின் 100% மக்கள் இலுக்கு புல்லினால் வேயப்பட்ட சிறுகுடில்களிலேயே வாழுகின்றனர். அரச சார்பற்ற நிறுவனங்கள் சில இந்த மக்களுக்கு மிகச்சிறிய வீடுகளை அமைத்துத்தருவதற்கு முன்வந்தபோதிலும் அவை பூரணமாகக் கட்டிமுடிக்கப்படவில்லை. அவை பாதுகாப்புடன் வாழ்வதற்கு உகந்தவையாகவும் அமையவில்லை. பகல் வேளைகளில் மரங்களின் கீழ் தங்கும் இந்தக் கிராம மக்கள் இரவில் நித்திரை செய்வதற்கு மட்டுமே குடிசைகளை பயன்படுத்துகின்றனர்.

கிராம மக்களின் கல்வி, சுகாதார வசதிகள் மிகத் தாழ்ந்த நிலையிலேயே உள்ளன. மிக அண்மையிலேயே 9 ஆம் வகுப்பு வரையான பாடசாலை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மூத்த தலைமுறையினர் கல்வியறிவு இல்லாதவர்களாக இருக்கின்ற போதிலும் தற்போதுள்ள இளம் பராயத்தினர் கிராமத்திலுள்ள பாடசாலையில் படிக்கின்றனர். கிராமத்தில் குடிநீர், மற்றும் மலசலகூட வசதிகள் எதுவும் இல்லை. மருந்தகம் என்ற பெயரிலே பாழடைந்த கட்டிடம் மட்டுமே அங்கு உள்ளது. மின்சார வசதியின்மை இந்தக் கிராம மக்கள் எதிர்நோக்கும் மிகப்பெரும் பிரச்சினையாகும்.

கட்டுமுறிவு கிராம மக்களின் இத்தகைய நலிவுற்ற நிலையினைக் கருத்திற் கொண்டு வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம், கட்டம் IV (2008/2009) ன் கீழ் இக் கிராமத்தில் **136** வீடுகளை மீள்நிர்மாணம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

# திட்டப் பணிமுன்னேற்றம் குறித்து ஐரோப்பிய ஆணைக்குழு பாராட்டு

திட்டப் பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காக கடந்த 23.06.2008 தொடக்கம் 29.06.2008 வரை அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஆணைக்குழுவின் திட்ட மீளாய்வு மதிப்பீட்டு நிபுணர்கள் குழு தனது 20.07.2008ம் திகதிய அறிக்கையிலே திட்டப் பணிகள் குறித்து பாராட்டு தல்களைத் தெரிவித்துள்ளது. அத்துடன் திட்ட நடவடிக்கை களைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக மேலதிக நிதி உதவியையும் ஆணைக்குழு வழங்க முன்வந்துள்ளது.

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணப் பணிகளுக்காக நிதிவழங்கும் உடன்படிக்கையில் 28.12.2005 ஆம் திகதியன்று ஐரோப்பிய ஆணைக்குழு கைச்சாத்திட்டது. இதனைத் தொடர்ந்து 01.01.2006 ஆம் திகதியிலிருந்து திட்டத்திற்கு நிதிஉதவி வழங்கும் நடவடிக்கையை ஐரோப்பிய ஆணைக்குழு ஆரம்பித்தது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் அழிவடைந்த வீடுகளில் 3,514 வீடுகளை மீள்நிர்மாணம் செய்வதற்காக ஐரோப்பிய ஆணைக்குழு 7.5மில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கியிருந்தது. அறிக்கை யிடப்பட்ட திகதியின் போது (20.07.2008) 81%மான வீடுகள் மீள்நிர்மாணம் செய்யப்பட்டிருப்பதாகவும், 11%மான வீடுகள் மீள்நிர்மாணம் செய்யப்பட்டுவரு வதாகவும், இன்னும் 8% மான வீடுகளே மீள்நிர்மாணம் செய்யப்பட வேண்டிய நிலையிலே இருப்பதாகவும், இது மிகத் திருப்திகரமானதென்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுளளது. ஆணைக்குழுவின் திட்டக்காலம் முடிவடைவதற்கு முன்னர் (30.06.2009) 100%மான வீடுகளும் கட்டிமுடிக்கப் பட்டுவிடுமென எதிர்பார்க்கப்ப டுகின்றது.

கட்டிமுடிக்கப்பட்ட அனைத்து வீடுகளிலும் மக்கள் குடியம ர்ந்திருப்பதாகவும், அவ்வீடுகள் சிறப்புற பராமரிக்கப்பட்டு வருவதாகவும், மீள்நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் இடப் பெயர்வு வன்செயல்களால் பாதிக்கப்பட்ட சில வீடுகள் இதற்கு விதிவிலக்கானவையாக உள்ளதாகவும் அவ்வ றிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழலைப் பேணுவதன் பொருட்டு மீளக் குடியமர்ந்த பயனாளிக் குடும்பங்களுக்கு பழமரக் கன்றுகளும், நாற்றுகளும், விதைகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இந் நடவடிக்கையின் கீழ் திட்டமிடப்பட்ட இலக்கின் 57% அடையப்பெற்றுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

திட்டப் பங்காளர்களின் ஈடுபாடானது திட்டம் செயற்திற னுடன் தொழிற்படுவதற்கு வாய்ப்பளிப்பதாக உள்ளது. கிராமங்களிலே சமூகத் தொடர்புகள் மீளுருவாக்கப்பட் டிருப்பதாகவும், குடியமர்ந்த மக்கள் அயலவர்களுடன் உறவுகளை வளர்த்துக் கொண்டுள்ளதுடன் ஒருவருக் கொருவர் ஆதரவாகச் செயற்படுவதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக தரைவழியாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கட்டடப் பொருட்கள் எடுத்துச் செல்வது தவிர்க்கப்பட்டுள்ளது. தற்போது அவை கடல்மார்க்கமாக கொண்டு செல்லப்பட்டு யாழ்ப்பாண மாவட்டத்தின் பயனாளிகளுக்கு குறைந்த விலையில் விநியோகி க்கப்படுகின்றது. இந்த சேவை தொடர்ந்து மேற்கொள்ள ப்படவேண்டுமென அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயனாளிகளில் சிலர் கடன்பட்டு தமது வீடுகளைக் கட்டி முடித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் மாதத்திற்கு 10% வட்டிக்கு கடன்வாங்கியுள்ளனர். திட்டம் இவர்களின் விடயத்தில் கரிசனை எடுக்க வேண்டும். அவர்களுக்கு உதவுவதற்கான வழிவகைகள் குறித்து கவனம் எடுக்க வேண்டும் என அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் நடைமுறையானது அப்பிரதேசங்களில் சமாதானத்தைத் தோற்று விப்பதற்கு வழிவகுப்பதுடன் பொருளாதார நடவடிக்கைக ளின் வளர்ச்சியையும் வளப்படுத்தும். சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதனை மட்டும் கருத்திற் கொள்ளாது, அது சுகாதாரம் வருமான வழிவகைகள் மற்றும் உணவுப் பழக்கவழக்கங்களிலும் முன்னேற்றகரமான நிலைமைகளை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. முன்னேற்றகரமான வீட்டுவசதியானது பயனாளிகளின் வாழ்க்கையில் மட்டுமல் லாது ஏனையோரது வாழ்க்கையிலும் தாக்கத்தினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதுமட்டுமன்றி திட்டம் எதிர்பார்க்காத அல்லது திட்டமிடப்படாத பல சாதகமான நன்மைகளும் சமூகத்தில் உருவாகியுள்ளன.

மீளக் குடியமர்ந்த அனைத்துக் குடும்பங்களினதும் சிறார்கள் பாடசாலைக்குக் கிரமமாக சென்றுவருகின்றார்கள் என்பது அச் சமூகத்தினராலேயே எதிர்பார்க்கப்படாத ஒரு முன்னேற்றகரமான தாக்கம் என அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கணவன் மனைவி இணைந்த வங்கிக் கணக்கு நடைமுறை அறிமு கப்படுத்தப்பட்டதன் காரணமாக பால் சமத்துவம் பேணப்பட் டுள்ளது. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் திருப்திகரமான வகையிலே வழிநடாத்தப்ப ட்டுள்ளன எனவும் அவ் வறிக்கையில் சுட்டிக்காட்ட ப்பட்டுள்ளது.



அம்பாறை மாவட்டத்தின் திட்டப் பயனாளிகளினால் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் வரவேற்கப்பட்டனர்.

### நேர்ப் பற்றிய ஐரோப்பிய ஆணைக்குழுவின் தரவரிசைப்படுத்தல்

| செயற்பாடு | தரவரிசை |
|---|---|
| பொருத்தப்பாடு, வடிவமைப்பின் தரம் | - B |
| நடைமுறைப்படுத்தும் திறன் | - B |
| பயன்பாட்டுத் தன்மை (இற்றைவரை) | - A |
| விளைவு எதிர்பார்க்கை | - A |
| சாத்தியப்பாடான நிலைபேறுடைமை | - B |

### சர்வதேச அபிவிருத்தி நிறுனம் (IDA) (உலக வங்கி)யின் தரவரிசைப்படுத்தல்

I. அபிவிருத்தி நோக்கினை நிறைவேற்றுதல்
II. நடைமுறைப்படுத்துதல்
} திருப்திகரமானது


# சுற்றுச் சூழலை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் விநியோகம்





வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் சுற்றுச் சூழல் மேம்படுத்தல் திட்டத்தின் கீழ், திட்டப் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பயனாளிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கு வதற்காக இடம்பெற்ற வைபவத்தினையும் திட்டப் பணிப்பாளர் பயனாளி ஒருவருக்கு தென்னை நாற்று மற்றும் அதற்கான பசளைப் பொதி ஆகியவற்றை வழங்குவதனையும் படங்களில் காணலாம்.

## வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் பௌதீக இலக்கும் – முன்னேற்றமும் 15.09.2008 இல் உள்ளபடி





**வெளியீடு :** வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்
68/4 A, மக்கெய்சர் அடை வீதி, உவர்மலை,
திருகோணமலை
இலங்கை



தொலைபேசி : 026- 2227536
தொலைநகல் : 026 -2220031
மின்அஞ்சல் : pdnehrp@sltnet.lk
இணையதளம் : www.nehrpsl.org